O.S.No. 431/2021 – Date : 19.02.2026

DW1 – கோவிந்தராஜு

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன், எனக்கு எழுத படிக்கத்தெரியும். நானும் மற்ற பிரதிவாதிகளும் தாவா சொத்தில்தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரி. வாதியும் நானும் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரி.

வாதி என்ன ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தாவா சொத்தை கிரயம் செய்து தரக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். கிரய ஒப்பந்த ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. அந்த ஆவணம் என்னவென்று தெரியாமல் நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிரய ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என்று பதிலுரை தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த ஒரு கிரய ஒப்பந்த பத்திரமும் எழுதி கொடுக்கவில்லை என்பதால் அதன் அடிப்படையில் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 5வது கையெழுத்து என்னுடையது என்றால் சரி. ஆனால் பூர்த்தி செய்யப்படாத ஆவணத்தில் நான் கையெழுத்து செய்தேன். இந்த ஆவணத்தில் உள்ள முதல் ரேகை யாருடையது என்றால் என்

அம்மாவின் கைரேகை. 3வதாக உள்ள கைரேகை என் சகோதரியின் கைரேகை. 4வதாக உள்ள கையெழுத்து என்னுடைய சகோதரர் ராஜசேகரின் கையெழுத்து. 6வதாக உள்ள கையெழுத்து என்னுடைய மற்றொரு சகோதரரின் கையெழுத்து.

மேற்படி ஆவணத்தில் அய்யனார் மற்றும் குமரவேல் சாட்சி கையெழுத்து செய்துள்ளாக்ள் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி ஆவணம் ஒரு வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அது என் முன்னால் தயாரிக்கப்பட்ட ஆவணம் அல்ல. இந்த ஆவணம் என் முன்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் இல்லை என்று எனது பிரமாண வாக்குமூலத்திலோ பதிலுரையிலோ நான் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. இந்த ஆவணத்தை நான் விருப்பப்பட்டு என் முன்னிலையில்தான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

30.03.2016 அன்று எழுதப்பட்டுள்ள இந்த கிரய ஒப்பந்த ஆவணம் வெற்றுதாளில் எழுதப்பட்டது என்று கூறி வாதியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வெற்றுத்தாளில் கையெழுத்து போட்டுக்கொடுத்ததை வாதி பூர்த்தி செய்துகொண்டார் என்று வாதி மீது குற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. கிரய ஒப்பந்த பத்திரம் எனது குடும்பத்தினரால் மனமுவந்து எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

06.10.2021 அன்று வாதி தரப்பில் எனது குடும்ப உறுப்பினர்கள் 6 பேருக்கும் சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் மேற்படி அறிவிப்பு என் கவனத்திற்கு வரவில்லை. மேற்படி அறிவிப்பு சம்மந்தமாக தபால்துறையினர் என் வீட்டில் ஒட்டிய அறிவிப்பை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தபால்துறையினர் நாங்கள் 7 பேரும் அறிவிப்பை வாங்க மறுத்துவிட்டதாக மேற்குறிப்பு செய்து அறிவிப்பு திருப்பப்பட்டது என்றால் சரியல்ல. நான் வீட்டில் இருந்தும் அறிவிப்பை வாங்க மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல, நாங்கள் குல தெய்வ கோவிலுக்கு சென்றுவிட்டோம்.

எங்கள் குல தெய்வ கோவில் எங்கே உள்ளது, எந்த தேதியில் கோவிலுக்கு சென்றோம் என்று குறிப்பிட்டு நாங்கள் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நாங்கள் வெள்ளி வேலை செய்து வருவது குறித்து ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

வாதியிடம் என் அண்ணன் சுப்ரமணி 50 கிலோ வெள்ளி வாங்கினார் என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்காகதான் வெற்றுபத்திரத்தில் கையெழுத்து செய்து கொடுத்தோம். என் அண்ணன் வாங்கிய 50 கிலோ வெள்ளிக்கு நாங்கள் அனைவரும் சேர்ந்து கூட்டா கிரய ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள்

கூட்டாகதான் வியாபாரம் செய்து வந்தோம். கூட்டாக வியாபாரம் வருவதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வாதிக்கு வட்டி செலுத்தி வந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ஏப்ரல் 2019ம் வருடம் ஊரில் பஞ்சாயத்து பேசியது குறித்து பஞ்சாயத்து முச்சலிகா போன்ற ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

50 கிலோ வெள்ளிக்காக வாதிக்கு ஆவணம் எழுதி கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதியிடம் 2016 முதல் வழக்கு போடும்வரை பேச்சுவார்த்தையில்தான் இருந்து வந்தோம் என்றால் சரி.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.